1993 அக்டோபர் 29]

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வியின் பயனை நன்றாக அறிந்தவர், உணர்ந்தவர், தெரிந்தவர். ஆகையினால்தான் 50, 60 வருடங்களாக பாழடைந்த நிலையிலிருந்த அந்த மாணவர்கள் விடுதியை ரிப்பேர் செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மனமார்ந்த, உளங்கனிந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அதற்குப் பக்கத்திலே இருக்கும் நிலத்தில் கடைகள் கட்டிக் கொடுத்தால் நம் அரசுக்கு லாபம் வரும், அப்படிச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையின் அடிப்படையிலும், அந்த இடத்திலே இதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராய்ந்தும், அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 75, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

75—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு நிதி உதவி.

* 21129—திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு தமிழக அரசு நிதி உதவி செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் நிதியுதவி அளிக்கப் படுகிறது ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்கலைக் கழகத்தின் மொத்த வருவாயையும், அதன் மொத்த செலவினத்தையும் கணக்கில் கொண்டு ஒட்டு மொத்த மானியம் நிர்ணயம் செய்யப்பட்டு, ஆண்டு தோறும் அத்தொகை நான்கு தவணைகளில் வழங்கப்படுகிறது. இவ்வாறு மானியத்தைக் கணக்கிடும் போது, அண்ணாமலைப்

பல்கலைக் கழகம் தொலைக் தூர கல்விப் பயிற்சிநடத்தி வருவதால் அந்த வருவாயில் 20 விழுக்காடு கழிவு செய்யப்பட்டு எஞ்சியுள்ள தொகையினையே மானியமாக அளிக்கப்பட்டு வருகிறது. ஒட்டு மொத்த மானியம் நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு வழங்கப்படும் அகவிலைப்படியில் 50 விழுக்காட்டுத் தொகையை அகவிலைப்படி மான்யமாக வழங்கி வருகிறது. மேலும், பல்கலைக் கழக மான்யக் குழுவின் நிதி உதவியோடு செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

முற்பகல் 10–55

திரு. என்.ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ள வருவாய் எவ்வளவு? தொலை தூரக் கல்வி மூலம் பெற்ற வருவாய் எவ்வளவு? நம்முடைய அரசு அந்தப் பல்கலைக் கழகத்திற்கு கொடுக்க வேண்டிய மானியம் எவ்வளவு? அதில் முதல் தவணையாக எவ்வளவு கொடுக்கப் பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பல்கலைக்கழகத்தின் வருவாய் எவ்வளவுஎன்ற குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால் 1–4–1991 முதல் முன் தேதியிட்டு வழங்கப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு 358 இலட்சம் ரூபாய் மொத்த மானியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த பல்கலைக் கழகத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட தொகையில் வேளாண்மைத் துறையின் செலவினமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. அதைப் போலவே இணை மானியம் (மேச்சிங் கிராண்ட்) என்ற வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு 1993–94 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் திட்டச் செலவுகளுக்காக (பிளான் எக்ஸ்பென்டிச்சர்) 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : தலைவர் அவர்களே ஏற்கனவே இந்தப் பல்கலைக் கழகத்தில் ‘ஆஸ்டல்’ நடத்தி வந்தார்கள். அதில் 500 பேர் வேலை பார்த்தனர். அங்கே வேலை பார்த்தவர்களில் 300 பேர்களுக்கு பணி வழங்கப் பட்டுள்ளது. 200 பேர்கள் பணி இல்லாமல் இருக்கிறார்கள். என்.எம்.ஆர். என்று சொல்லக்கூடிய முறையில் வேலைக்கு குறைந்த சம்பளத்தில் அமர்த்தியிருக்கிறார்கள். தற்போது இந்த முறை கையாளப்படவில்லை. இதற்குப் பதிலாக ‘லேபர் சப்ளை காண்ட்ராக்ட் கம்பெனிகள்’ மூலமாக அங்கே வேலைக்கு

ஆட்களை வைக்கிறார்கள். அவர்களுக்குக் கூட 450 ரூபாய், 350 ரூபாய் மட்டுமே சம்பளமாக வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல. தினக்கூலி அடிப்படையில் 750 ரூபாய் சம்பளத்தில் ஒவ்வொரு டிபார்ட்மென்ட்டிலும் 40 பேர், 50 பேர், 60 பேர் நீண்ட காலமாக பணியாற்றி வருகிறார்கள். நன்றாகப் படித்து பட்டம் பெற்றவர்கள் கூட வறுமையின் காரணமாக இது போன்ற பணிகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை வீணடித்துக் கொள்ளுகின்ற நிலைக்குப் போய் இருக்கிறார்கள். இப்படியாக ஏறத்தாழ 1,000 ஊழியர்கள் ஆண்டுதோறும் பாதிக்கப்பட்டு குறைந்த சம்பளம், தினக்கூலி அடிப்படையில் தற்காலிகப் பணியினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சர்வீஸ் காலத்தை இழப்பதோடு எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது. அவர்கள் எந்த நேரத்திலும் வேலை இழக்கும் சந்தர்ப்பம் உள்ளது. ஆகவே, இதில் தலையிட நம்முடைய அரசுக்கு அதிகாரம் உள்ளதா ? அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு 'ரெசிடென்ஷியல் யுனிவர்சிட்டி' என்று இருப்பதால் நேரடியாக அரசு தலையிடுவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும் அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களிடமிருந்து இப்படிப்பட்ட கோரிக்கை அரசுக்கு வரவில்லை. அவர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால் இது குறித்து அரசு ஆராய்ந்து மேல் நடவடிக்கைத் தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 76, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

76—

திருச்சி சிந்தாமணி அருகே பேருந்து நிலையம்.

*11082—திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சிந்தாமணி அருகே ஒரு பேருந்து நிலையம் அமைப்பது அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?